*2020 மார்ச் 13*]

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாராபுரத்தில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்கிறார். அவர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்திலே இன்றைக்கு அரசு கல்லூரிகளாக 6 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், அதே பகுதியில் அரசு உதவிபெறும் ஒரு கல்லூரியும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்தினுடைய மாணாக்கர்களுடைய சேர்க்கைக்கு இவை போதுமானதாக இருக்கின்ற காரணத்தினால்தான், இன்றைக்கு அங்கே புதியதாக ஒரு கல்லூரி தொடங்குவதற்கு அரசானது பரிசீலனை செய்யவில்லை. வருங்காலங்களில் அந்தப் பகுதியினுடைய மாணாக்கர்களுடைய விண்ணப்பத்திற்கு ஏற்றாற்போல் அரசானது பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கக்கூடிய அரசினுடைய 6 கலை மற்றும்அறிவியல்கல்லூரிகளில்ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றஇடங்கள் காலியாகஇருக்கின்றகாரணத்தினால்தான் அங்குபுதியகல்லூரியைத் தொடங்குவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.A. சத்யா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**89—**

## தொழிற்சாலைகள்

***60116—திரு. S.A. சத்யா:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஓசூர் தொகுதியில் தொழிற்சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், ஏற்கெனவே 2,100 ஏக்கர் நிலப்பரப்பில், ஓசூரில் SIPCOT Phase–I, Phase–II அமையப்பெற்று, 347 நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 4,700 கோடி ரூபாய் அளவுக்கு 347 தொழில் நிறுவனங்களும் முதலீடு செய்திருக்கின்றன. 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதியதாக தொழில் அமைக்கும் திட்டம் அரசின் சார்பாக இல்லை. இருந்தாலும், யாராவது தொழில்முனைவோர்கள் முன்வந்து தொழில் நிறுவனத்தில் தொழில் தொடங்கினால், டிட்கோ நிறுவனத்துடன் சேர்ந்து, joint venture–ல் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, தொழில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S.A. சத்யா அவர்கள்.

**திரு. S.A. சத்யா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் SIPCOT Phase–I, Phase–II அமையப்பெற்று, தொழிற்சாலைகள் கொண்டுவரப்பட்டு, இன்றைக்கு ஆண்டுக்கு சுமார் 3 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு turnover ஆகிறது. ஓசூரில் மட்டுமல்லாமல், தளி, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிகளிலும் தொழிற்சாலைகள் நிரம்பக் காரணமாக இருந்தது தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைக்கு கொண்டுவரப்பட்ட பெருந்தொழிற்சாலைகள் மட்டுமே இன்றளவும் ஓசூரில் உள்ளன. இந்த பெருந்தொழிற்சாலைகளை நம்பி சுமார் 3,000 குறு, சிறு தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றை நம்பி சுமார் 1 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பெருந்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பெருகாததன் காரணமாக, பெருந்தொழிற்சாலைகளுக்கு job work செய்கின்ற குறு, சிறு தொழிற்சாலைகள் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு, குறைந்த இலாபத்தில் பணிபுரிகின்ற சூழ்நிலையில் நஷ்டம்

*2020 மார்ச் 13*]

*அடைந்து, இன்றைக்கு குறு, சிறு தொழிற்சாலைகள் மூடுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகி வருகின்றது. எனவே, பொது நிறுவனங்களோ அல்லது பெரு நிறுவனங்களோ ஓசூரில் அமைந்தால் மட்டுமே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.A. *சத்யா, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். நீங்கள் உரையை எழுதிக் கொண்டுவந்து இங்கே படித்துக் கொண்டிருக்கிறீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.*

**திரு. S.A. சத்யா:** *எங்களுடைய பகுதியிலுள்ள தொழிற்சாலைகளையும், தொழிலாளர்களையும் காப்பாற்ற முடியும்.* Kia Motors, Volkswagen *போன்ற தொழிற்சாலைகள் வரவிருந்த சூழ்நிலையில், வராமல் போனது. எனவே, புதிய தொழிற்சாலைகள் ஓசூரில் அமைய வாய்ப்புள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டில் 5 நிறுவனங்கள் 250 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, 550 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், 2019,* Global Investors Meet (GIM)*–க்குப் பிறகு* Ether Company, Electric Motor Bike *தயார் செய்கின்ற நிறுவனம் பெங்களூரு, கர்நாடகா மாநிலத்திலிருந்து இங்கு வந்துள்ளது. அந்த தொழில் நிறுவனத்தின் முதலீட்டின் மதிப்பு கிட்டத்தட்ட ரூ.635 கோடி. கிட்டத்தட்ட 4,300 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அந்தத் திட்டம் இப்போது தயார் நிலையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும்,* SIPCOT Phase–III*–க்கு* ready *ஆகிவிட்டோம். சூளகிரி வட்டத்தில் உள்ள மருதண்டபள்ளி, நல்லகானகொத்தப்பள்ளியில் சுமார் 905 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெகுவிரைவில்* SIPCOT Phase–III*–யும் அமையப்பெறும்.*

*முற்பகல் 10–40*

*தமிழக அரசைப் பொறுத்தவரையில், சென்னைக்கு அடுத்து இரண்டாவது இடமாக ஓசூரைத்தான் பார்வையில்*

பார்க்கிறது. பல முதலீட்டாளர்கள் ஓசூரில் தொழில் தொடங்க விரும்பி வருகின்றனர்; climate அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, கர்நாடகா மாநிலம், பெங்களூருக்கு அருகில் ஓசூர் இருக்கக்கூடிய காரணத்தினால், மிகப் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு ஏற்புடைய இடமாக ஓசூரை அமைப்பதற்கு நிச்சயமாக SIPCOT முழு முயற்சியுடன் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அடுத்ததாக, GMR கிட்டத்தட்ட 2,100 ஏக்கர் வைத்திருக்கிறது. GMR–ஐப் பற்றி உங்களுக்கும் தெரியும். முதற்கட்டமாக, Mahindra World City மாதிரி innovative முயற்சியாக சிறப்புப் பொருளாதார மண்டலத்தை 279 ஏக்கரில் கொண்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 279 ஏக்கரில் Special Economic Zone–சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பது தொடர்பாக கையொப்பமிடப்பட்டு அந்தப் பணியும் நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S.A. சத்யா அவர்கள்.

**திரு. S.A. சத்யா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில் இருக்கின்ற தொழிற்சாலைகளில் முக்கால் பாகம் automobile industries ஆகத்தான் இருக்கின்றன. அதனால், நீங்கள் பாதுகாக்கப்பட்ட டெல்டா மண்டலம் கொண்டுவருவதற்கும், எங்களுக்கும், இந்தத் தொழிற்சாலைகளுக்கும் சம்பந்தம் கிடையாது. Ether என்ற Electric bike Company–யை கொண்டு வருகிறோம் என்று சொல்கிறீர்கள். ஓசூரில் அந்த Company அமைவதாக இருந்தால் அதை நான் வரவேற்கின்றேன். 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் GST அமலுக்கு வந்தது. ஓசூரில் automobile industriesதான் அதிகமாக இருக்கின்றன. GST அமலுக்கு வந்த சூழ்நிலையில், அவற்றிற்கு 28 சதவிகிதம் GST போடப்பட்டது. GST புதிதாக வந்த சமயத்தில், அரசாக இருந்தாலும் சரி, தொழில் நிறுவனங்களானாலும் சரி அது பற்றிய புரிதல் சரியாக இருக்கவில்லை. அதன் காரணமாக, சில நிறுவனங்கள் GST–யை காலதாமதமாகச் செலுத்தின. அதற்காக இன்றைக்கு மத்திய அரசு 18 சதவிகிதம் வட்டி போட்டிருக்கிறது. 18 சதவிகிதம் வட்டி போட்டதால், ரூ.30 இலட்சம், ரூ.50 இலட்சம், ரூ.60 இலட்சம் என்று நிறுவனங்கள் கட்டக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மத்திய அரசிடம் நீங்கள் எடுத்துரைத்து இந்த

*2020 மார்ச் 13*]

வட்டியை இரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவில் பொருளாதார மந்த நிலை இருக்கிறது. இருந்தாலும், நம்முடைய தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையைப் பொறுத்தவரையில், எந்தவித பாதிப்பும் இல்லை. உற்பத்தித் துறை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அனந்தபுரியில் Kia Motors இருப்பது பற்றி உங்களுக்குத் தெரியும். அனந்தபுரியில் இருக்கக்கூடிய Kia Motors–ன் vendors அனைவரும் இங்கேதான் இருக்கிறார்கள். Door செய்வது, steering செய்வது, chassis செய்வது, chassishub, tyre hub என அனைத்தும் இங்கேதான் நடைபெறுகின்றன. உலக அளவில் பொருளாதார மந்த நிலை இருந்தாலும் சரி, தேசிய அளவில் பொருளாதார மந்த நிலை இருந்தாலும் சரி, உற்பத்தித் துறையைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் கொஞ்சம்கூட பாதிப்பு இல்லை. GST பற்றிக் குறிப்பிடுகிறார். GST Council–ல் நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் இடம்பெற்றிருக்கிறார். ஏற்கெனவே, GST–ஐ குறைத்திருக்கிறார்கள். மத்திய அரசின் கவனத்திற்கு இது கொண்டு செல்லப்படும். எந்தவொரு குறு, சிறு தொழிலும் தமிழ்நாட்டில் மூடப்படவில்லை; நடைபெற்றது மற்ற இடங்களில்தான். Automobile sector–ல் உலக அளவில், Global level–ல் top 10–ல் இருக்கிற State, தமிழ்நாடுதான். அந்த அளவிற்கு தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது. அந்த அளவிற்கு நாங்களும் கவனமாக இருக்கிறோம். இன்றைக்கு பிரான்ஸ் நாட்டின் PSA Car Company கூட இங்கே வந்திருக்கிறது. Electric Vehicle Park அமையப்போகிறது. கிட்டத்தட்ட 4,000 ஏக்கரில் e–Vehicle Park வருகிறது. அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். சென்னைக்கு அடுத்தகட்டமாக, ஓசூர் மற்றும் கோயம்புத்தூர் இரண்டையும் இணைத்து, ஓசூரை 2–வது கட்டமாகவும், கோயம்புத்தூரை 3–வது கட்டமாகவும் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தில் இருக்கிறது. ஓசூரை மிகப் பெரிய தொழில் நிறுவனங்களின் hub ஆக, மிகப் பெரிய தொழில் நிறுவனங்களை உள்ளடக்கிய SIPCOT

Phase–III, Phase–IV அமைக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய முழு விருப்பம். நிச்சயமாக ஓசூரை இன்னும் பத்து ஆண்டுகளில் மிகப் பெரிய தொழில் வளர்ச்சி பெறுகின்ற தலைசிறந்த ஒரு பகுதியாக மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு மிக கவனமாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**90**—

## கால்நடை மருத்துவமனை

*7137—**திருமதி பொன். சரஸ்வதி:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருச்செங்கோடு தொகுதி, செண்பகமாதேவி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, செண்பகமாதேவி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். கால்நடை பராமரிப்புத் துறைக்கு கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அரசு என்று சொன்னால், அது நம்முடைய அம்மா அவர்களுடைய அரசான மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் கடந்த ஆண்டில் 75 கால்நடைக் கிளை நிலையங்களையும், ஏறத்தாழ 50 கால்நடை மருந்தகங்களையும் கொடுத்து, ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தார்கள். அரசாணை எண் 167, கால்நடை பராமரிப்பு, பால்*